DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 82/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 9 |
| Name | மகாராஜன் |
| Father / Husband Name | வெங்கடாசலம்பிள்ளை |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் திருச்செந்தூரில் குடியிருந்து வருகின்றேன். நான் ஐஸ் கம்பெனியில் வேலை செய்து வருகின்றேன். அ.சா. 8 என் மாமா. விபத்தில் இறந்த நபர் என் உடன் பிறந்த அக்கா. கடந்த 31.08.2014 ம் தேதி காளையார்கோவிலில் நடக்கவிருந்த உறவினரின் திருமணத்தில் கலந்து கொள்ள என் அக்கா பருவதம், என் அக்காவின் உறவினர்கள் மூன்று பேர் ஆகியோர் மதுரையில் இருந்து இண்டிகா காரில் பாஸ்ட் டிராக் வாடகைக்கு எடுத்து காளையார்கோவிலுக்கு சென்றார்கள்.

2) திருமணத்திற்கு சென்று விட்டு மீண்டும் திரும்பி வரும்

போது மானாகுடி விளக்கு ரோட்டில் மதியம் 01.30 மணியைப் போல் என் அக்கா மற்றும் உறவினர்கள் சென்ற வண்டியில் எதிர் திசையில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக மதியம் 02.30 மணியைப் போல் என் அக்காவின் கணவரான அ.சா. 8 குமாருக்கு தகவல் வந்ததாக எனக்கு தகவல் சொன்னார். உடனே என்னை கிளம்பி வரச்சொன்னார்.

3) நாங்கள் அனைவரும் உடனே கிளம்பி வந்து சிவகங்கை வந்துவிட்டோம். தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது என் அக்காவின் பிரேதத்தை தான் பார்க்க முடிந்தது. காயம்பட்ட மற்ற நபர்களை நான் பதற்றத்தில் இருந்ததால் பார்க்க விரும்பவில்லை. மறுநாள் காலை எனது அக்காவின் பிரேதத்தை விசாரணை முடித்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) உறவினர் திருமணத்திற்கு எந்த ஊரில் இருந்து கிளம்பி எந்த ஊருக்கு சென்றார்கள் என்றால் திருச்செந்தூரில் இருந்து காளையார்கோவிலுக்கு சென்றார்கள். எத்தனை மணிக்கு திருச்செந்தூரில் இருந்து கிளம்பினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வேறு இடத்தில் வசிக்கின்றேன். திருச்செந்தூரில் இருந்து பாஸ்ட் டிராக் வண்டியில் இருந்து வந்தார்களா என்றால் ஆமாம்.

2) யார் யார் உடன் என் அக்கா திருமணத்திற்கு சென்றார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஓட்டுநரை சேர்க்காமல் என் அக்காவுடன் சேர்த்து என் அக்காவின் உறவினர்கள் 5 பேர் சென்றார்கள். எந்த வாகனத்தில் சென்றார்கள் என்றால் பாஸ்ட் டிராக் இண்டிகா வாகனம். நான் எத்தனை மணிக்கு சிவகங்கை வந்தேன் என்றால் மாலை 06.00 மணிக்கு. நான் நேரடியாக காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம்.

3) போலிசார் என் அக்காவின் கணவரிடம் விசாரித்து எழுதி வாங்கினார்களா என்றால் நான் வெளியே இருந்தேன் விசாரித்தார்கள். காவல் நிலையம் வந்த பிறகு மருத்துவமனைக்கு சென்று என் அக்காவின் பிரேதத்தை பார்த்தேனா என்றால் ஆமாம். அப்போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள்

என்றால் காவல் நிலைய வாசலில் வைத்து விசாரித்தார்கள். எழுதி எதுவும் வாங்கவில்லையா என்றால் ஆமாம்.

4) இறந்து போனவர் என் அக்கா என்பதால் நான் இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.04.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**